பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
09. 11. 2024 **SATURDAY** 7 .15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் சாலை விபத்துக்களை குறைப்பதற்கு தரமான சாலைகளை அமைப்பது அவசியம் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

2. சண்டிகரில் மின்சேவைகள் தனியார் மயமாக்கப்படுவதால், ஊழியர்களின் நலன் பாதிக்கப்படாது என்று மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் கூறியுள்ளார்..

3. அஸ்ஸாம் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள ஐந்து தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

4. காஸாவில் உயிரிழந்தோரில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐ.நா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், இன்று தாய்லாந்தின் **Kunlavut Vitidsam** –ஐ எதிர்கொள்கிறார.

>>>><<<<

நாட்டில் சாலை விபத்துக்கள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில், தரமான சாலைகளை அமைப்பது அவசியம் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

ராய்ப்பூரில் நேற்று இந்திய சாலைகள் அமைப்பின் மாநாட்டில் பேசிய அவர், சாலை பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

சாலைகளை அமைப்பதில் பொறியியல் துறையில் உள்ள குறைபாடுகளை போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய சாலைகள் தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை கவனமாக ஆய்வு செய்வதற்கு முன்பு ஒப்பந்தப் புள்ளி வழங்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சாலைகளை தரமாகவும், பாதுகாப்பாகவும் அமைப்பதன் மூலம், விபத்துக்களையும், உயிரிழப்புகளையும் குறைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

சாலைகளை அமைப்பதில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் இத்துறையில் உள்ள பொறியாளர்கள் சர்வதேச நடைமுறைகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை கடைபிடிக்குமாறும் திரு. நிதின் கட்கரி கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

சண்டிகரில் மின்விநியோக சேவைகள் தனியார் மயமாக்கப்படுவதால், ஊழியர்களின் நலன் பாதிக்கப்படாது என்று மத்திய எரிசக்தி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் கூறியுள்ளார்.

சண்டிகரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார்மயமாக்கும் போது, ஊழியர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்றும் அவர்களின் பணிவாய்ப்பு பறிக்கப்படாது என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே, தனியார்மயத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதாகவும், ஆனால், மின்துறையை தனியார்மயமாக்க உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது என்றும் திரு. மனோகர்லால் கட்டார் கூறினார்.

>>>><<<<

சர்வதேச நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில், இந்திய நிறுவனங்கள், குறைந்த செலவில் தரமான மருத்துவ சாதனங்களை தயாரித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மருத்துவ சாதனங்கள் உற்பத்தி தொழில் துறையினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், புதிய திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இத்திட்டம் மருத்துவ சாதனங்கள் உற்பத்தியில் நாடு சுயசார்பு நிலையை அடைய உதவும் என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால், தொழில்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறையினருக்கு மத்திய அரசு வழங்கும் பல்வேறு உதவிகளை அத்துறையினர் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், மத்திய அரசின் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், மருத்துவ சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில் துறையினருக்கு பெருமளவில் ஊக்கமளிக்கும் என்று கூறினார்.

மருத்துவ சாதனங்களை வடிவமைப்பதற்கும், பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள நீதிபதி சஞ்சீவ் கண்ணா, கண்ணியமானவர் என்றும், நீதி வழங்குவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்பு கொண்டவர் என்றும் தலைமை நீதிபதி சந்திரசூட் கூறியுள்ளார்.

நாளையுடன் தலைமை நீதிபதி பொறுப்பிலிருந்து ஓய்வு பெறவுள்ள அவர், உச்சநீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற பிரிவு உபச்சார விழாவில் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் தாம் பணியாற்றிய போது, ஒவ்வொரு நாளும் சட்ட அறிவு மற்றும் தனிப்பட்ட நுண்ணறிவு இரண்டையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது என்றும் அவர் கூறினார்.

புதிதாக தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள சஞ்சீவ் கண்ணா, தொலைநோக்குப் பார்வையுடன் நீதிமன்றத்தை வழிநடத்துவார் என்றும் அவர் தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியான சந்திர சூட், தனது பதவிக் காலத்தில் அயோத்தி நில விவகாரம் உட்பட பல முக்கியமான வழக்குகளில் தீர்ப்பளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள ஐந்து தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

இம்மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள ஐந்து தொகுதிகளில் 34 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஆளும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, பிஜேபி மூத்த தலைவர் திரு. சர்பானந்த சோனாவால் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. புபேன்குமார் மற்றும் கட்சியின் மூத்த தலைவர் திரு. கவுரவ் கொகோய் ஆகியோர் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில், பிஜேபி மூன்று தொகுதிகளிலும், அஸ்ஸாம் கனபரிஷத் மற்றும் **UPPL** ஆகிய கட்சிகள் தலா ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

காங்கிரஸ் கட்சி ஐந்து தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.

>>>><<<<

சபரிமலை ஐயப்ப பக்தர்களின் வசதிக்காக, திருவனந்தபுரம் - பெங்களூரு இடையே இன்று முதல் வாராந்தர சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

திருவனந்தபுரத்திலிருந்து மாலை மணி 6.05-க்கு புறப்படும் சிறப்பு ரயில், திருப்பூர், ஈரோடு, சேலம் வழியாக மறுநாள் காலை மணி 10.55-க்கு பெங்களூரு சென்றடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுமார்க்கத்தில் பெங்களூருவிலிருந்து நண்பகல் மணி 12.45-க்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை மணி 6.45-க்கு திருவனந்தபுரம் வடக்கு நிலையம் சென்றடையும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>><<<<

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த இவர், மாநில அரசின் சிறு குறு தொழில்துறையின் செயலராக பணியாற்றி வருகிறார்.

தலைமை தேர்தல் அதிகாரியாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டதன் மூலம், தமிழகத்தின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் இப்பொறுப்பில் இருந்து வந்த திரு. சத்யபிரத சாஹூ, தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறை செயலராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

>>>><<<<

சத்திஸ்கர் மாநிலத்தில், பாதுகாப்புப் படையினருடன் நேற்று நடைபெற்ற மோதலில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதியில் மத்திய ரிசர்வ் காவல்படையும், மாநில அரசின் காவல்படையும் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது இந்த மோதல் நிகழ்ந்தது.

மோதல் நடைபெற்ற இடத்திலிருந்து மாவோயிஸ்ட்கள் 3 பேரின் சடலங்களை பாதுகாப்புப் படையினர் மீட்டனர்.

மேலும் ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் கைப்பற்றினர்.

>>>><<<<

காஸா போரில் உயிரிழந்தோரில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐ.நா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே போர் ஏற்பட்ட பின்னர், இதுவரை ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் உயிரிழந்தோர் குறித்த தகவல்களை ஆய்வு செய்தபோது, இது தெரியவந்தாக ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான தாக்குதல், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு எதிரானது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

உயிரிழந்தவர்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமானோர், தங்களது குடியிருப்புகளில் இருந்த போது உயிரிழந்தவர்கள் என்றும் அது தெரிவித்துள்ளது.

>>>><<<<

நெதர்லாந்தில் இஸ்ரேல் கால்பந்து ரசிகர்கள் மீது, அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கால்பந்துப் போட்டி முடிந்த பின்னர், இந்த தாக்குதல் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 5 பேர் படுகாயம் அடைந்தாகவும், அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் நெதர்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 62 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் கால்பந்து ரசிகர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நெதர்லாந்து பிரதமர் திரு. **Dick Schoof** கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், இன்று தாய்லாந்தின் **Kunlavut Vitidsam** –ஐ எதிர்கொள்கிறார்.

தென்கொரியாவில் நடைபெறும் இப்போட்டியில், நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கிரண் ஜார்ஜ், ஜப்பானின் **Takuma**–வை நேர்செட்களில் வென்றார்.

>>>><<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 61 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டர்பனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இநதியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 202 ரன் எடுத்தது.

203 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி, 17 புள்ளி ஐந்து ஓவரில் 141 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>><<<<

சென்னையில் நடைபெற்று வரும் கிராண்ட்மாஸ்டர் செஸ் போட்டியின் நான்காவது சுற்றில், இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி, ஈரானின் **Amin Tabatabaei**-யை வென்றார்.

இன்று நடைபெறவுள்ள ஐந்தாவது சுற்றில் அர்ஜூன் எரிகேஸி, ஈரானின் **Parhan Maghsoodloo** –வை எதிர்கொள்கிறார்.

நேற்று விதித் குஜராத்தியும், அரவிந்த் சிதம்பரமும் பங்கேற்ற போட்டிகள் டிராவில் முடிந்தன.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி, முஹமதன் ஸ்போர்ட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

நேற்று பெங்களூரு – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 2-2 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

>>>>END<<<<